Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 14

சனிக்கிழமை 10 டிசெம்பர் 2022

கார்த்திகை 24 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

# அழிவுகளை விதைத்து கடந்தது ‘மண்டோஸ்’

- ★ வடக்கில் 1,659 பேர் பாதிப்பு,
- ★ 270 வீடுகள் சேதம்,
- ★ 450 கால்நடைகள் உயிரிழப்பு,
- ★ பயன்தரு மரங்களும் பாறின
- ★ மீன்பிடிவலைகள், படகுகளும் சேதம்
- ★ நாடளாவிய ரீதியில் 3 பேர் சாவு!



**யாழ்ப்பாணம், டிசெம்பர் 10**

**மண்டோஸ் புயலின் தாக்கம் காரணமாக வடக்கு மாகாணத்தில் 484 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 659 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 270 வீடுகளும், 8 வர்த்தக நிலையங்களும் சேதமடைந்துள்ளன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக சுமார் 450 கால்நடைகள் உயிரிழந்துள்ளதுடன் 300 க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.**

»11

## 'மண்டோஸ்' புயலால் இனிப்பாதிப்பில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 10
மண்டோஸ் புயல் நேற்று இரவு 10 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து 350 கிலோ மீற்றர் தொலைவில் நிலைகொண்டிருந்ததுடன் அது வலுவிழந்து மெதுவாக நகர்ந்தது. இதன் காரணமாக வடக்கு மாகாணத்துக்கு இன்றைய தினம் தெளிவான காலநிலை நிலவும் என்று

»11

## ஒரு லட்சம் ஹெக்ரேயரில் வடக்கில் நெற்பயிர்செய்கை

யாழ்ப்பாணம், டிசெ. 10
வடக்கில் இந்த ஆண்டு ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 506 ஹெக்ரேயரில் நெற்பயிர்ச்செய்கை விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திலேயே

»11

## அரசால் வழங்கப்பட்ட உரம் வீரியமானதே!!

யாழ்ப்பாணம், டிசெ. 10
அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரம் வீரியமானது என்று யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி ச.கைலேஸ்வரன் தெரிவித்தார்.
அரசாங்கத்தால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரங்கள் விவசாயி

»11




## தளபதிகள் தீபன், கில்மனின் தந்தையார் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 10
தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி - வடகளமுனைத் தளபதி - பிரிகேடியர் தீபன் மற்றும் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி கில்மன் ஆகியோரின் தந்தையாரான

»11

## போதைப்பொருளைச் சாட்டி படைப் பிரசன்னம் அதிகரிப்பு

### *மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அம்பிகா தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 10
போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை சுகாதார அடிப்படையில் அணுகுவதே மனித உரிமையாகும். போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் தேவையில்லை. இதனைச் சாட்டாக வைத்து

»11

## சதொசவில் விலை குறைப்பு

கொழும்பு, டிசெ. 10
சதொச விற்பனை நிலையத்தில் நேற்று முதல், கீரிச் சம்பா அரிசியின் விலை 215 ரூபாவாகவும், ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 199 ரூபாவாகவும், பதப்படுத்தப்

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கடும் குளிர் காரணமாக கால்நடைகள் உயிரிழப்பு

## பண்ணையாளர்களுக்கு பல இலட்சம் நட்டம்

கிளிநொச்சி, டிசெ. 10

தற்போது நிலவி வருகின்ற சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள கடும்குளிர், மழை மற்றும் பலத்த காற்று காரணமாக கிளிநொச்சியில் பல கிராமங்களில் 160க்கும் மேற்பட்ட மாடுகள் மற்றும் ஆடுகள் என்பன உயிரிழந்துள்ளன. இதனால் பண்ணையாளர்களுக்குப் பல லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய கால்நடைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் மருத்துவர் கௌரிதிலகன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

நேற்றுமுன்தினம் மாலையும் இரவும் நிலவிய கடும்குளிர் காரணமாக, கிளிநொச்சி சாமிப்புலத்தில் 75 மாடுகளும், வெட்டுக்காடு கிராமத்தில் 60 மாடுகளும், பொன்னகர் கிராமத்தில் தனியார் ஒருவரின் மாட்டுப் பண்ணையில் 13 மாடுகளும், புன்னைநீராவியில் 7 மாடுகளும், நாகேந்திரபுரத்தில் 5 மாடுகளும், பூநகரியில் 5 மாடுகளும் மற்றும் ஏனைய பல கிராமங்களில் உதிரிகளாகவும் சுமார் 160க்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்துள்ளன.

திருவையாறு கிராமத்தில் வீசிய கடும் காற்றுக் காரணமாக மரம் முறிந்து வீழ்ந்ததில் 3 ஆடுகள் உயிரிழந்ததோடு பல ஆடுகள் மற்றும் மாடுகள் என்பன காயங்களுக்குள்ளாகியுள்ளன.

இதனால் கால்நடைப் பண்ணையாளர்கள் பல லட்சம் ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

கடும்குளிருடன் கூடிய மழை மற்றும் காற்று காரணமாகவும் மரங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாகவும் கால்நடைகளின் உயிரிழப்பு இன்னும் அதிகரிக்கக்கூடும்.

கால்நடைகளை கதகதப்பாக வைத்து அவற்றின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக ரயர்கள் மற்றும் இதர பொருள்களை எரித்து அதன்மூலம் கால்நடைகளுக்கு உடற்சூட்டை வழங்கும் நடவடிக்கையில் பண்ணையாளர்கள் ஈடுபட்டுள்ளனர் - என்றார். (ம-14-214)

# கொட்டித் தீர்த்த மழையால் வீடுகளுக்குள் வெள்ளஇடர்

## பலர் இடப்பெயர்வு: கிளிநொச்சியில் துயரம்

கிளிநொச்சி, டிசெ. 10

மண்டோஸ் புயலால் ஏற்பட்ட கன மழை காரணமாக கிளிநொச்சியில் பொதுமக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் உட்சென்றுள்ளது. இதனால் பலர் இடம்பெயர்ந்து உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று குடியமரும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட திருவையாறு - கிளிநொச்சி நகரப் பகுதி மற்றும் கணேசபுரம், பாரதிபுரம், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்லாறு, தருமபுரம், பெரியகுளம், கல்மடுநகர், ஊரியான், கோரக்கன்கட்டு போன்ற பல கிராமங்களில் உள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதுடன் வீட்டுச் சூழலைச் சுற்றியும் வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால் மக்கள் வீட்டிலிருந்து வெளியேற முடியாத நிலையில் உள்ளனர். பலர் இடம்பெயர்ந்து தமது உறவினர்கள் வீடுகளுக்கும் இடைத்தங்கல் முகாம்களுக்கும் சென்றுள்ளனர். (ம-14-113)





# முல்லைத்தீவில் நேற்று 4 குளங்கள் வான்பாய்வு

முல்லைத்தீவு, டிசெ. 10

முல்லைத்தீவில் நான்கு குளங்கள் நேற்று வான்பாயத் தொடங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பிரிவில் பழையமுறிகண்டிகுளம், கோட்டைக் கட்டியகுளம், மருதங்குளம், தேராங்கண்டல்குளம் என்பன வான்பாயத் தொடங்கி உள்ளன.

இதில் மருதங்குளம் 15 நாள்களுக்கு முன்னரும் வான் பாய்ந்திருந்த நிலையில் தற்போது இரண்டாவது தடவையாக வான்பாயத் தொடங்கியுள்ளது. (ம-13)

# கடும் காற்றுக் காரணமாக காக்கைதீவில் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காக்கைதீவுப் பகுதியில் வீசிய சுழற்காற்றால் மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. வீடுகளின் கூரைகள் காற்றில் அடித்துச் செல்லப்பட்டதுடன் வீடுகளுக்குள் வெள்ளமும் புகுந்துள்ளது.

(ம-14-125)

# வளிமண்டலத்தில் மாசுகள்: நடமாடுவதைத் தவிருங்கள்

## வடக்கு மக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 10

வளிமண்டல்த்தில் ஏற்பட்டுள்ள காற்று மாசு, தூசுகள் மற்றும் துகள்கள் அதிகரிப்பால் பொதுமக்கள் அநாவசியமாக வெளியில் நடமாடுவதைத் தவிர்ப்பது நல்லது என்று வடக்கு மாகாண மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் து.சுபோகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில நாள்களாக வடக்கு உட்பட இலங்கையின் சில பகுதிகளில் காற்றின் வேகம், காற்றின் திசை மற்றும் தாழமுக்க மாற்றத்தின் காரணமாக வளியில் காணப்படும் சில மாசுக்கள் இலங்க்கயிலே செறிவடையக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

அறிக்கையின்படி கடந்த சில நாள்களாக வளித்தர சுட்டெண் இலங்கையில் சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வாறு காணப்படுவதால் அநாவசியமாக வெளியில் நடமாடாது உரிய பாதுகாப்புடன் அவதானமாக நடமாடுவது நல்லது, அத்துடன் அநாவசியமாக நடமாடுவதைக் குறைத்துக் கொள்வதும் மிக நல்லது.

இதேவேளை- நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் மழையுடனான காலநிலை காணப்படுவதால் கிடைத்த அறிக்கையின்படி, இந்த வளித்தர சுட்டெண்ணானது குறைந்து சாதகமான நிலைக்குச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இது வேகமாகக் குறைவடைந்து சாதாரண ஒரு மட்டத்தை அடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே இது தொடர்பில் மக்கள் பெரிதாகப் பயப்படத்தேவையில்லை. ஆனால், நோயாளிகள், வயோதிபர்கள், சிறுவர்கள் அவதானமாக நடமாடி அநாவசியமாக வெளியில் செல்வதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது.

இந்த சீரற்ற காலநிலை அநேகமாக இன்னும் ஓரிரு தினங்களில் சாதாரண நிலையை அடையக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன - என்றார்.

(ம-14-125-27-20)

# மேம்பட்டுள்ளது காற்றின் தரம்!

கொழும்பு, டிசெ. 10

நாட்டின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையை எட்டியிருந்த நிலையில் நேற்றுக் காலை 8 மணி நிலைவரப்படி காற்றின் தரம் கணிசமாக மேம்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

காற்றின் ஊடாக இந்தியாவில் இருந்து இலங்கையின் வான்வெளிக்கு தூசித் துகள்கள் வருவது படிப்படியாகக் குறைவடைந்து வருவதாக தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மண்டோஸ் புயல் ஏற்படுத்திய காற்றுச் சுழற்சி காரணமாக இந்தியாவின் தூசுகளும் துகள்களும் இலங்கையின் வளிமண்டலத்துக்கு இழுத்து வரப்பட்டதால் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையில் இருக்கின்றது என்றும் இதனால் மாஸ்க் அணிவது கட்டாயம் என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நேற்றுமுன்தினம் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அத்துமீறிய மணல் அகழ்வு எதிரொலி

# முல்லை. - செம்மலையில் வீடுகளுக்குள் கடல் நீர்!

## மக்கள் அந்தரிப்பு



முல்லைத்தீவு, டிசெ. 10
மண்டோஸ் புயல் காரணமாக, முல்லைத்தீவு – செம்மலைப் பகுதியிலுள்ள வீடுகள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் கடல் நீர் புகுந்துள்ளது. அந்தப் பகுதியில் அத்துமீறி முன்னெடுத்த மணல் அகழ்வும் இதற்குப் பிரதான காரணம் என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


மண்டோஸ் புயலின் எதிரொலியாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் நேற்றுக்காலை வரையில் வடமாகாணத்தில் கன மழை பெய்தது.
இதன் காரணமாகவே வீடுகளுக்குள்ளும் விவசாய நிலங்களுக்கும் கடல்நீர் உட்புகுந்துள்ளது.
இது தொடர்பில் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்ததாவது:-
செம்மலைக் கடலிலிருந்து வீடுகள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்துள்ளது என்று மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதனையடுத்து கரைதுறைப்பற்று பிரதேசசபையின் ஆளணிகளுடன் கடல்நீரின் பரவுதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-14-13)



தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் காரைநகர், முந்திப்புலம் பகுதியிலுள்ள வீடொன்றின் மேல் மரம் முறிந்து வீழ்ந்து வீடு பெருமளவில் சேதமடைந்துள்ளது. சம்பவத்தின்போது வீட்டில் ஐவர் இருந்த போதிலும் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ம-14-27)

## கடற்றொழில் இல்லாததால் மீன்களின் விலை உயர்வு!

புயல் காரணமாக கடந்த புதன்கிழமை முதல் மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடாததால் மீன்களின் விலைகள் நேற்றுச் சடுதியாக அதிகரித்திருந்தன. மண்டோஸ் புயல் காரணமாக மீன்பிடி மற்றும் ஆழ்கடல் மீன்பிடி என்பவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்குச் செல்லாததால் சந்தைகளில் மீன்களின் வரத்து நேற்றுக் குறைந்திருந்தது. இதனால் மீன்களின் விலைகள் நேற்று அதிகரித்திருந்தது. கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் ஒரு கிலோ பாரைமீன் மிகக்குறைவாக (கிலோ 700 ரூபா) சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-17)



## வீடு மீது வீழ்ந்தது தென்னை

மண்டோஸ் புயலின் தாக்கத்தால் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 'ஆவணம்' கிராமத்திலுள்ள வீடொன்றின் மீது முற்றத்தில் நின்ற தென்னை மரம் முறிந்து வீழ்ந்துள்ளது.
நேற்றுப் பின்னிரவு இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. தென்னை வீழ்ந்ததால் வீடு பலத்த சேதமடைந்த போதிலும் வீட்டிலிருந்தவர்களுக்கு தெய்வாதீனமாக எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.
இந்த அசம்பாவிதம் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14-213)

# மண்டோஸ் எதிரொலி: போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10
மண்டோஸ் புயல் காரணமாக மரங்கள் வீதியில் குடைசாய்ந்ததால் வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.
வீதிக்கு அருகில் நடப்பட்ட நிழல்தரு மரங்கள் பலவும் இவ்வாறு முறிந்தும் குடைசாய்ந்தும் வீழ்ந்ததால் பல மணிநேரத்துக்குப் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. அந்தந்த உள்ளூராட்சிச் சபைகளின் முயற்சியாலும், பொதுமக்கள், இளைஞர்களின் தன்னார்வச் செயற்பாடுகளாலும் குறித்த மரங்கள் அகற்றப்பட்டு போக்குவரத்து படிப்படியாக வழமைக்குக் கொண்டு வரப்பட்டது. (ம-14-27-17)

# படகுச் சேவைகள் நேற்றும் நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 10
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நயினாதீவு மற்றும் குறிகாட்டுவான் இடையிலான படகுச்சேவைகள் நேற்று வெள்ளிக்கிழமையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.
மண்டோஸ் புயலின் எதிரொலியாகக் குறித்த படகுச் சேவைகள் நேற்றுமுன்தினமும் இடம்பெறவில்லை.
சீரற்ற காலநிலை நேற்றும் தொடர்ந்ததை அடுத்து நேற்றும் படகுச் சேவைகள் கைவிடப்பட்டன. (ம-14-20)

## மண்டோஸ் புயல் படகுகள் சேதம்!

யாழ்ப்பாணம், டிசெ. 10
மண்டோஸ் புயலின் எதிரொலியாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள மீனவர்களின் படகுகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
புயல் காரணமாக கடும் கடற்கொந்தளிப்புக் காணப்பட்டது. சுமார் 3 முதல் 4 மீற்றர் வரையான உயரத்துக்குக் கடலலைகளின் தாக்கம் இருந்தது. கடலலைகளின் தாக்கத்தால் கரைகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த படகுகள் சில சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.
குறிப்பாக மணற்தறைகள் அல்லாமல் கல்தறைகளைக் கொண்ட கடற்கரைகளில் நிறுத்தப்பட்ட படகுகள் அலையால் கற்களுடன் அடிபட்டு பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)



## மண்டோஸ் புயல்: வாழைகள் அழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 10
மண்டோஸ் புயலின் எதிரொலியாக வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் உள்ள வாழைத் தோட்டங்கள் அழிவடைந்துள்ளன.
வடமாகாணத்தில் நேற்றுமுன்தினம் மாலை வரையில் கடும் குளிரான காலநிலை நிலவிய நிலையில், நேற்று இரவு முதல் பின்னிரவு வரையில் கடும் காற்று வீசியது. இதனால் பல நூறு வாழைகள் முறிந்து வீழ்ந்துள்ளன.
யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீர்வேலி, கோப்பாய், புன்னாலைக்கட்டுவன், புத்தூர், வயாவிளான், ஊரெழு, மருதனார்மடம், உரும்பிராய் உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ள வாழைத்தோட்டங்களில் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது. (ம-14-27-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க கூ. சங்கங்கள் முன்வரவேண்டும்

## யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10

எதிர்வரும் காலங்களில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை அதிகரிக்க பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உற்பத்தி கூட்டுறவு அமைப்புக்கள் ஆகியன முன்வரவேண்டும் என்று யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் தெரிவித்தார்.

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 58ஆவது நினைவுதின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எமது நாட்டின் உள்ளூர் உற்பத்தியைப் பலப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

வடக்கு மக்கள் உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க அதிக நாட்டம் காட்ட வேண்டும்.

இதற்கு சிறந்த திட்டங்களை மேற்கொள்ள கூட்டுறவு அமைப்புக்கள் முன் வரவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் கூட்டுறவு அமைப்புக்கள் பரந்துபட்ட அளவில் செயற்படுகின்றன. அவை மக்கள் மத்தியில் ஒரு கூட்டுறவு விழிப்புணர்வை ஏற்படுத்தி கூடுதலான அங்கத்தவர்களை இணைக்க வேண்டும்.

உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து அவற்றைக் கொள்வனவு செய்வதன் ஊடாகவே உள்ளூர் உற்பத்தியாளர்களை வளர்க்க முடியும்.

அதன்படி ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் செயற்திறனுடன் செயற்பட்டு மக்களை உணவு நெருக்கடியில் இருந்து மீண்டெழ உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் - என்றார். (ச-17)


## மணமகள் தேவை


1991இல் பிறந்த வாய்பேச முடியாத மணமகனுக்கு தகுதியான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 623 2572


# மரண அறிவித்தல்

## மோசஸ் அருளானந்தம் (இளைப்பாறிய ஆசிரியர்)

**தோற்றம் : 29.11.1927** **மறைவு : 08.12.2022**



மல்லாகம் குளமங்காலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட மோசஸ் அருளானந்தம் நேற்று முன்தினம் (08.12.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசஸ் அடைக்கலம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராயப்பு சுவக்கீனாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி சிசில் (மலர் - இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான லூர்த்தம்மா, பத்திநாதர், மாகிரட், பெனடிக்ட், றீற்றா மற்றும் மதுரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இமாக்குலேற் மேரி (ரதி), கிங்ஸ்லி அலெக்ஸ் (பிரான்ஸ்), அனற்மேரி ஜோதினி (நியூசிலாந்து), ஜெனற்மேரி அமலினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜோண் தேவதாசம், ஜீன் விஜிதா (பிரான்ஸ்), சோதிலிங்கம் மோகன்ராஜ் (நியூசிலாந்து), குணநாதன் ஜோசப் பிரதீபன் (பொது வைத்திய நிபுணர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாந்த் (இங்கிலாந்து), மடோனா (இங்கிலாந்து), ஜெராட் (அவுஸ்திரேலியா), திபுசியஸ் (மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சியாளர், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), ஜெனிற்றா (செலான் வங்கி), மரியா (KPMG), வேர்ஜினி (பிரான்ஸ்), யூலியட் (பிரான்ஸ்), டிலான் (பிரான்ஸ்), தியாகராஜன் (நியூசிலாந்து), அமுதினி (நியூசிலாந்து), செந்தூரன் (நியூசிலாந்து), சிந்துஜா (நியூசிலாந்து), தனுஷ் (நியூசிலாந்து), மரியதிவ்வியன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற அருட்பணி மைக்கல் சவரிமுத்து (அ.ம.தி) அவர்களின் மருமகனும், அருட்பணி பிரான்சிஸ் யோசப் (முன்னாள் அதிபர் சம்பத்திரிசியார் கல்லூரி) அவர்களின் ஒன்றுவிட்ட சகோரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.12.2022) சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் 27/9, புங்கன்குளம் வீதி, பாண்டியன்தாழ்வு யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியை தொடர்ந்து பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
27/9, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

CS 22159 )1-6

# வலி.தென்மேற்கு பிரதேசசபையின் பட்ஜெட் ஏகமனதாக நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் வரவு - செலவுத் திட்ட விவாதம் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

சபையின் 28 உறுப்பினர்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2 உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 2 உறுப்பினர்களும் வருகை தராத நிலையில் சபைக்கு வருகை தந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 1 உறுப்பினருமாக 23 உறுப்பினர்களும் வரவு - செலவுத்திட்டத்துக்கு ஏகமனதாக ஆதரித்த நிலையில் சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (ஒ-14-125)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். 2023 ஆம் ஆண்டிற்கான 2வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2023.01.01ஆம் திகதி தொடக்கம் 2023.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்** - 10.12.2022 - 16.12.2022 பி.ப 2.00 மணி வரை
**கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி** - 19.12.2022 பி.ப 1.30 மணி வரை
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி** - 19.12.2022 பி.ப 2.00 மணிக்கு
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம்** - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்

| தொ இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை - 02 | 750.00 | 7,500.00 | 355,560.00 | 250.00 |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 197,230.00 | 250.00 |
| 4 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 65,000.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் (மின் கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 50,100.00 | |
| 2 | மல்வம் மாட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல் களத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 1,000.00 | 10,000.00 | 389,990.00 | 250.00 |
| 3 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 64,000.00 | |
| 4 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 60,500.00 | |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40,500.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2022.10.03 ஆம் திகதிய வலம்புரி, உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பார்வையிடலாம்.

க.தர்சுஷன்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(CR 38703)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆலைவாய் கரும்பாக...

தென் கிழக்கு வங்களா விரிகுடாவில் ஏற்பட்டிருந்த காற்றழுத்தத் தாழ்வுமையமானது 'மண்டோஸ்' புயலாக மாற்றம்பெற்று வடக்கு – கிழக்கில் பல்வேறுபட்ட அழிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. வெள்ளப்பெருக்கு வீடுகளைச் சூழ்ந்ததையடுத்து இருப்பிடத்தை இழக்கும் நிலைக்கு மீண்டுமொருமுறை தள்ளப்பட்டிருக்கின்றனர் கிளிநொச்சி மக்கள். ஆக மொத்தத்தில் 'மண்டோஸ்' வடக்கு மக்களின் வாழ்வாதாரத்திலும் பொருளாதாரத்திலும்கூட ஒரு புயலாகவே அடித்திருக்கின்றது. நகரப் பகுதிகளில் இந்தத் தாக்கம் கூதலுடனும் கொடுங்காற்றுடனும் கடந்துவிட்ட போதிலும் கிராமங்களின் நிலை அவ்வாறில்லை. பரிதாபத்துக்குரியனவாகத்தான் கிராமங்களும் புறநகரங்களும் அமைந்திருக்கின்றன.

இலங்கையின் பொருளாதாரம் ராஜபக்சக்களின் 'கெட்டித்தனத்தால்' எப்போது அதலபாதாளத்தில் வீழ்ந்ததோ அப்போதிலிருந்து இந்த நாட்டு மக்களுக்கான நிவாரணங்கள், சலுகைகள் என்பனவற்றில் அரசாங்கத்தால் ஒருமுனையில் தொடர்ந்து வெட்டு விழுந்துகொண்டிருக்கின்ற அதேநேரம், மின்கட்டண அதிகரிப்பு, போக்குவரத்துச் செலவு என்று கூடுதல் நெருக்குவாரங்கள் மறுமுனையில் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. அரசாங்கம் மக்களைக் கைவிட்டுள்ள பின்னணியில் தம் கைகளால்தான் தமக்கு மீட்சியே அன்றி வேறில்லை என உழைத்துக் கொண்டிருந்த சமூகத்தைத்தான் மண்டோஸ் அதிகம் இலக்காக்கியிருக்கின்றது. மண்டோஸ் ஏற்படுத்தியுள்ள இந்தத் தாக்கமானது தனிநபர் பொருளாதாரத்திலும் நாட்டின் பொருளாதாரத்திலும் இரட்டிப்புப் பின்னடைவைக் கொண்டுவரவல்லது.

'மண்டோஸ்' புயலால் வவுனியாவில் உள்ள மிகப்பெரும் பப்பாசித் தோட்டங்கள் நிர்மூலமாகியிருக்கின்றன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில் உள்ள வாழைத்தோட்டங்களில் பல்லாயிரம் வாழைகள் அழிந்திருக்கின்றன. இவையெல்லாவற்றையும்விட 20 டிகிரி செல்சியஸில் உறைந்து சுமார் 200 க்கும் மேற்பட்ட மாடுகள் மற்றும் ஆடுகள் (கிளிநொச்சியில் மாத்திரம்) உயிரிழந்திருக்கின்றன. புயலால் கடந்த நான்கு நாள்களாக நேரடித் தொழிலிழப்பை மீனவர்கள் சந்தித்த அதேநேரம், அதற்கு நிகரான அழிவை விவசாயிகளும் பண்ணையாளர்களும் இப்போது எதிர்கொண்டிருக்கின்றனர்.


இந்த மீனவர்களும் விவசாயிகளும் பண்ணையாளர்களும்தான் நாட்டின் தற்சார்புப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த வல்லவர்கள். இலங்கையின் பொருளாதார நெருக்கடியும், சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றை நோக்கிய கையேந்தல்களும் முடிவுக்கு வரவேண்டுமாயின் அதற்குக் காத்திரமான பங்களிப்புச் செய்யக்கூடியவர்கள் இந்த விவசாயிகளும், மீனவர்களும், பண்ணையாளர்களும்தான். இவ்வாறிருக்கையில் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த இழப்பை – பின்னடைவை – பொருளாதாரக் குலைவை எவ்வாறு அரசாங்கம் பார்க்கப்போகின்றது – அணுகப்போகின்றது என்பதுதான் 'மண்டோஸ்' ஏற்படுத்திச் சென்றுள்ள மில்லியன் டொலர் கேள்வி.

கடந்த இரண்டு வருடங்களாகவே விவசாயிகளும் மீனவர்களும் பண்ணையாளர்களும் ஏகப்பட்ட நெருக்குவாரங்களைச் சந்தித்திருக்கின்றார்கள். இரசாயன உரம் மற்றும் எரிபொருள் இல்லாமல் விவசாயிகளும், மீன்பிடிக்குத் தேவையான எரிபொருள் இல்லாமல் மீனவர்களும், கால்நடைகளுக்குத் தேவையான உணவில்லாமல் பண்ணையாளர்களும் என இவர்கள் சிலுவைகளைச் சுமந்துகொண்டே நிற்கின்றனர். 'ஆலைவாய் கரும்பு போல்' சக்கையாக நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவர்களுக்கு, கட்டுக்கோப்பான பொறிமுறைகள் மூலம் 'இழப்பீடு' என்ற சிறிய ஆறுதலைக் கொடுத்து, அவர்களின் சிலுவைகளைக் கொஞ்சமாவது இறக்கிவைக்க ரணில் அரசாங்கம் முன்வரவேண்டும். இதைவிடுத்து அவர்கள் மேலான பாராமுகம் இனியும் தொடர்ந்தால் அதனால் ஏற்படும் பேரழிவும் – வலியும் அவர்களுக்கு மட்டுமானதாக இருக்காது. தற்சார்பின் மகத்துவத்தை கொஞ்சமாவது கொழும்பு உணரட்டும்.

## நாளொரு நல்வார்த்தை

" ஒருவனுடைய ஆசைகள் வளர வளர அவனுடைய தேவைகளும் வளர்ந்து கொண்டே போகும்!"

- பிளேட்டோ




# அரிசி இறக்குமதிக்கு தடை விதித்தார் ரணில்

கொழும்பு, டிசெ. 10

2023ஆம் ஆண்டு அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என்பதால், அரிசி இறக்குமதிக்குத் தடை விதிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்



விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர விடுத்த கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விவசாய அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

நாட்டில் இந்தமுறை 6 லட்சத்து 75 ஆயிரம் ஹெக்ரேயரில் விவசாயிகள் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ளனர். பெரும்போகத்துக்குத் தேவையான உர விநியோகம் தற்போது இடம்பெற்றுவருகின்றது. நாட்டுக்குத் தேவையான அரிசியை உள்நாட்டு விவசாயிகள் உற்பத்திசெய்துள்ளனர். அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லைக் கொள்வனவு செய்வதை விடுத்து அரிசியைக் களஞ்சியப்படுத்துகின்றனர். இந்த விடயத்தில் அனைவரும் உரிய முறையில் செயற்படவேண்டும். அத்துடன் இந்தமுறை பெரும்போகத்தில் அதிக விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்தவகையில் எதிர்காலத்தில் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்படாது - என்றுள்ளது. (ச-இ)

## பால்மாவின் விலை ரூ.100 அதிகரிப்பு?

கொழும்பு, டிசெ. 10

பால்மாவை இறக்குமதி செய்யும் நிறுவனம் ஒன்று தமது பால்மாவின் விலையை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது.

இதன்படி, பால்மா பொதி ஒன்றின் விலையை 100 ரூபாவால் அதிகரிக்க அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது. இந்த விலை அதிகரிப்புடன் 400 கிராம் பால்மா பொதி ஒன்றின் விலை ஆயிரத்து 240 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

## மிகப்பெரும் தங்கக்கடத்தல் கட்டுநாயக்கவில் முறியடிப்பு

கொழும்பு, டிசெ. 10

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக வருகைதந்த பயணிகள் நால்வரிடமிருந்து 22 கிலோ தங்கநகைகள் மற்றும் 40 கோடி ரூபா பெறுமதியான தங்கத் துகள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சென்னையிலிருந்து வருகைதந்த நால்வரிடமே இந்தப் பெருந்தொகை தங்கம் மீட்கப்பட்டுள்ளது. இந்தியப் புலனாய்வு நிறுவனம் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த பயணிகளை சோதனையிட்டபோதே இவை மீட்கப்பட்டன. சந்தேகநபர்களில் மூவர் டுபாயிலிருந்து சென்னைக்கு சென்று, அங்கிருந்து கட்டுநாயக்கா ஊடாக இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

நாளை
11.12.2022
ஞாயிற்றுக்கிழமை
கார்த்திகை 25

சுபநேரம் : 09.19 - 10.49
ராகுகாலம் : 04.49 -06.19

சங்கஹடசதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 • 09 • 1949

மறைவு 09 • 12 • 2022

## திருமதி ஜெயபத்மினி யோகராசா (பேபி அக்கா)

பளை, வீமன்காமம் வீதி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மற்றும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயபத்மினி (பேபி அக்கா) யோகராசா நேற்று (09.12.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி இராசம்மா தம்பதியரின் புதல்வியும், நடராசா மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகளும், யோகராசாவின் (ஓய்வுநிலை மருந்தாளர்) அன்பு மனைவியும், ஜெயப்பிரியா (ஆசிரியை, யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ஜெயபானு (ஆசிரியை, யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை), ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மநேசன் (ஆசிரியர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை), சுரேந்திரநாத் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பரமலிங்கத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சந்திரகாந்தி மற்றும் ஸ்ரீபாலன் (கனடா), காலஞ்சென்ற சந்திரகுமாரி மற்றும் சந்திரவதனா, மதிவதனி (இலண்டன்) ஆகியோரின் மைத்துனியும், சரண்யன், அக்ஷயன், சக்திதரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் மல்லாகம் சோடாக்கொம்பனி ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோடாக்கொம்பனி ஒழுங்கை,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22166) 1/6

# மரண அறிவித்தல்



தோற்றம் 16 • 08 • 1934

மறைவு 08 • 12 • 2022

## திருமதி சின்னத்தங்கம் மயில்வாகனம்

ஆவரங்காலை பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத் தங்கம் மயில்வாகனம் கடந்த (08.12.2022) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஆவரங்காலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி- சோதி ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், நவமணி (நோர்வே), காலஞ்சென்ற தவபாலன் (முன்னைநாள் உத்தியோகத்தர், மஸ்கன் லிமிட்.), வேல்மன்னன் (நோர்வே), சிவமணி (ஆசிரியை, யா/கைதடி நாவற்குழி அ.த.க.பா.), தவமணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கருணாகரன் (நோர்வே), மனோரஞ்சிதம் (ஓய்வுநிலை ஆசிரியை), கார்த்திகா (நோர்வே), நடராஜகுமார் (எழுதுநர், வ.தொ.கூ.ச. யாழ்ப்பாணம்), ஸ்ரீகாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிஷாகவன், நிறோதனன், ரொசாந்தன் (CIC நிறுவனம்), ரொசாளினி, நேருஜன், யதுசனன், கீர்த்தனன், கீர்த்திகா, தரணிகா, நிஸ்வின் மற்றும் ஷயந்தன் (கொமர்ஷல் லீசிங், யாழ்ப்பாணம்), யாணுகா (ஆசிரியை, கிளி/கனகாம்பிகைக்குளம் ம.வி.), உமாநிதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யுவன், பிரதிஷ்கா, மகிமா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் கைதடி கிழக்கு ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

T.P:077 611 6896

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 38711)

# பொது அறிவித்தல்
## மாநகரசபை யாழ்ப்பாணம்
## பாதீடு - 2023

யாழ் மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீடு (வரைபு) 2022.12.09 தொடக்கம் 2022.12.18 ஆம் திகதி வரை

- யாழ் மாவட்டச் செயலகம்
- யாழ் பிரதேச செயலகம்
- நல்லூர் பிரதேச செயலகம்
- யாழ் மாநகர சபை - பொதுசனத் தொடர்பு பகுதி
- யாழ் பொது நூல்நிலையம்
- நவீன சந்தை - வாடிக்கையாளர் சேவை நிலையம்

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ்வரைபுப் பாதீட்டினை பரிசீலித்து பாதீட்டினை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளையும் மாநகர சபை வட்டாரம் சார்ந்த முன்மொழிவுகளையும் எதிர்வரும் 2022.12.18 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் மாநகரசபைச் செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

2022.12.09

(CR 38702) (3/6)

# யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்
# பகிரங்க அறிவித்தல்

1917ம் ஆண்டின் 9ம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) 112ம் பிரிவின் கீழ் ஒப்படைத்தற் கட்டளை ஒன்றை கோரி செய்யப்படும் விண்ணப்பம்.

1. கந்தையா குமாரசுவாமி
   இல.33, செட்டித்தெரு,
   நல்லூர் யாழ்ப்பாணம்
2. பசுபதிக்குருக்கள்
   அர்த்தநாரீஸ்வரக்குருக்கள், பூதவராயர் சிவன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

**வழக்கு இல:- நம்பிக்கைச் சொத்து/59/ 2022** **மனுதாரர்கள்**

மேற்படி வழக்கில் மேலே பெயர் குறித்த மனுதாரர்களுள் 02ம் மனுதார் இதன் கீழ் அட்டவணைகளில் விபரிக்கப்படுவதான இரு மடாலயங்களிற்கும் 2021.12.20ந் திகதி பிரசித்த நொத்தாரிசு சுகனியா கணேசலிங்கம் முகதாவில் 776ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட மடா திபதி வெளிப்படுத்தல் உறுதியின் நியதிகளின் பிரகாரம் மடாதிபதியாக நியமனம் பெற்றுள்ள நிலையிலும்,

அதன் பிரகாரம் அவ்விருமடாலயங்களையும் நிருவகிக்கும்சட்டப்பொறுப்பும் அத்துடன் அதி-காரமும் கொண்ட நம்பிக்கைப்பொறுப்பாளராக 2ம் மனுதார் இருக்கும் நிலையிலும்,

அங்ஙனம் தன் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பின் பிரகாரம் குறித்த இரு மடாலயங் களையும் அதற்குச் சேர்ந்தவைகளையும் தனது உடமை, கட்டுப்பாடு, கட்டுக்காப்பு, முகாமைத் துவம், கையாளுகை ஆகியவற்றில் குறித்த இரு மடாலயங்களையும் நிருவகிக்கும் நோக்கத் திற்காக 2ம் மனுதார் தன்வசம் வைத்திருக்க வேண்டிய நடைமுறைத்தேவைப்பாடும், சட்டத் தேவைப்பாடும் எழுந்துள்ள நிலையிலும்,

மனுதார் குறித்த இருமடாலயச்சொத்துக்களை பயனாளிகளின் நலனுக்கென முறையாக நிர்வகிப்பதற்கு அவசியப்படும் வகையில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் மேற்குறித்த வழக்கைத் தாக்கல் செய்து குறித்த இரு மடாலயச்சொத்துக்களையும் அவற்றைச் சேர்ந்தவைகளையும் மடாலயங்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என்ற வகையில் தம்மிடம் ஒப்படைக்கும் கட்டளையொன்றைக் கோரி விண்ணப்பித்துள்ள நிலை யில் மன்று குறித்த விண்ணப்பம் தொடர்பில் எவராயினும் நபருக்கு /நபர்களுக்கு கோரப்படும் ஒப்படைத்-தற்கட்டளையை மனுதாரருக்கு வழங்குவது தொடர்பில் ஆட்சேபனை/ ஆட்சேபனைகள் உள்ளதா / உள்ளனவா என்பதை அறிவதற்கென பத்திரிகைப் பிரசுரமொன்றை செய்யுமாறு பணித்து கட்டளையிட்டுள்ள நிலையில்

மனுதார்களின் குறித்த விண்ணப்பம் தொடர்பில் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது. எனவே மனுதார்கள் கோரும் குறித்த ஒப்படைத்தற் கட்டளை வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை / ஆட்சேபனைகள் தெரிவிக்க விரும்புவோர் 2023.01.13ந் திகதியன்று தாமா கவோ தமது சட்டத்தரணி மூலமாகவோ தோன்றி தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகிறீர்கள்.

**நீதிமன்றக் கட்டளைப்படி**

**2022ம் ஆண்டு மார்கழி மாதம் 06ந் திகதி**

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

**மடாலய ஆதனங்கள்**

i. வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப்பகுதி, தெல்லிப்பளை கோவிற்பற்று, மாவிட்டபுரம் இறை "வேலர்காடு" நி.ப.2 1/2 இதில் கிழக்குப்பக்கமாக நி.ப.1 1/2 யும் அதற்குச் சேர்ந்தவைகளும், இதற்கு எல்லைகள், கிழக்கும், தெற்கும்:- கனகசபை முதலியார் பெண் அழகம்மாவின் ஆதனம், மேற்கு: பிரித்து விடப்பட்ட எஞ்சிய ஆதனம், வடக்கு: அலைவாய்க்கரை.

இது தெல்லிப்பளை பிரதேசசெயலர் பிரிவின் கீழும் வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் பிரிவின் கீழும் J/226 நகுலேஸ்வரம் கிராமசேவகர் பிரிவின் கீழும் அமைந்-துள்ளது.

ii. வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் கோவிற்பற்று, நல்லூர் இறை, கந்தசாமி கோவிலடி, சடையம்மா குருபூசைமடம் அல்லது அறுபத்து மூன்று நாயனார் குருபூசை மடம் எனப்படும் மடமும் இதற்குச் சேர்ந்த கிணறும் கட்டடங்களும் நி.ப.3 3/4 (மூன்றே முக்கால்) இதற்கெல்லைகள் கிழக்கு சுப்பிரமணியத்திற்கும் பங்காளருக்குமுடைய ஆதனம், வடக்கு:- ஐயாத்துரை ஐயர் மகள் ஞானத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு: தேரோடும் வீதி, தெற்கு:- தேரோடும் வீதியும் ரகுநாதமாப்பாண முதலியாருக்குமுடைய, சுப்பிரமணியஐயர் சுந்தரராஜ ஐயருக்குமுடைய ஆதனமும்.

இது நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் கீழும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிரிவின் பிரிவின் கீழும் J/107 கிராமசேவகர் பிரிவின் கீழும் அமைந்துள்ளது.

வரைபு
மனுதாரரகளின் சட்டத்தரணி

(CS 22160) (3/6)

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவுநேர மின்தடையால் மாணவர்கள் அந்தரிப்பு

## பெற்றோர் கவலை

கிளிநொச்சி, டிசெ. 10 இரவு வேளைகளில் அன்றாடம் மின்தடையை நடைமுறைப்படுத்துவதால் கிளிநொச்சி மாவட்ட பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெரிதும் அல்லற்படுகின்றனர் எனப் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் பின் தங்கியநிலையிலுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் மின்தடை நேரத்தில் மெழுகுவர்த்தி, தொலைபேசி வெளிச்சத்திலேயே கற்றல் நடவடிக்கையை மேற்கொள்கின்றனர். நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் மண்ணெண்ணெயைக்கூட பெறமுடியாத நிலை காணப்படுகிறது. எதிர்வரும் 18ஆம் திகதி புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெறவுள்ள நிலையில் மின்தடை காரணமாக அதற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்த முடியாத நிலையேற்பட்டுள் ளது. இதனால் எமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகின்றது. எனவே இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி பின்தங்கிய கிராமங்களுக்கு மின்வெட்டை நடைமுறைப்படுத்தாது மாணவரின் நலன் கருதி செயற்பட முன்வரவேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(ச-113)

**வீடுகளுக்கு வந்து கற்பித்தல்**

ஆங்கிலமொழி மூலம் - கணக்கீடு,கலைப் பாடங்கள், ஆங்கிலம், சிங்களம் O/L, A/L

தொடர்பு : 077 331 6402

**விற்பனைக்கு**

Euro Power 08kva ஜெனரேட்டர் ஊர்தியுடன் விற்பனைக்குண்டு.

KDh200 PDxxxx வான் விற்பனைக்குண்டு.

தொடர்புஇல.0777730567

# 2023ம் ஆண்டிற்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையானது 2023ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்ட வழங்குபொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் 31.12.2022ஆம் திகதி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொகுதிகள்**

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் / வேலை
தொகுதி "C" - வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொ.இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A - 01 | அனைத்து காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A – 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/உருக்கு) |
| A – 03 | கணினிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A – 04 | யன்னல் திரைச்சிலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A – 05 | குளியலறை பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A – 06 | கட்டட இரும்புப்பொருட்கள், தீந்தைகள் வாணிஸ் மற்றும் இரும்பு பொருட்கள் |
| A – 07 | மின்சார பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டார்கள், மின்சார பல்ப்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A – 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், திரவங்கள் மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், டயர், ரீயூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப்பொருட்கள், தொழிலாளர்களுக்கான நீளச்சப்பாத்துக்கள் |
| A - 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 14 | இரும்புப் பொருட்கள் |
| A - 15 | கற்கள், மணவகைகள் |
| A - 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 17 | பனைமரங்கள், சலாகைகள் |
| A - 18 | பாதணிகள், தோல்பொருட்கள் |
| A - 19 | அலங்காரப்பொருட்கள் |
| A - 20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |

| தொ.இல | சேவைகள் / வேலை |
|---|---|
| B - 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கலும் |
| B – 02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B – 03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் ( காற்று குளிராக்கி, தொலைநகல், நிழற்பட பிரதி இயந்திரம், கணினி, விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரம்) |
| B – 04 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தலும் மீளமுறுக்குதலும் |
| B – 05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள், அச்சிடுதல், பெயர்ப்பலகை, பனர்கள் ஞாபகார்த்த பலகை தயாரித்தல் ஏனையவை |
| B – 06 | கட்டட அமைப்பும் திருத்தவேலைகளும் |
| B – 07 | உள்ளகத் தொலைபேசி வலையமைப்பு, இணைய வசதி வழங்கல் மற்றும் பராமரிப்பும் |
| B – 08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B - 09 | கோலவுடை தைத்தல் |
| B - 10 | இறப்பர் முத்திரை வகைகளைத் தயாரித்து வழங்கல் |
| B - 11 | சுத்திகரிப்புச் சேவையும் பாதுகாப்புச் சேவையும் |
| B - 12 | வளிச்சீராக்கி திருத்தம், சேவிஸ் செய்தல் |

| தொ.இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C - 01 | சகல விதமான வாகன திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம் சீற் என்பவற்றிற்கான குசன் வேலைகள் |
| C – 02 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு |
| C – 03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

**நியந்தனைகள்**

01. அனைத்து விண்ணப்பதாரர்களும் பதிவு செய்து கொள்ள விரும்பும் ஒவ்வொரு தொகுதிக்குமாக வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் விண்ணப்பங்களுக்காக மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 (காசாக) வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி, மானிப்பாய் என்ற முகவரியில் உள்ள எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் (மு.ப 9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை) பணத்தினை நேரடியாகச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்று பூரணப்படுத்தி பற்றுச்சீட்டுடன் அனுப்புதல் வேண்டும்.

02.. விண்ணப்பங்களை அனுப்பும் போது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2023 எனக் குறிப்பிட்டு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி, மானிப்பாய் என்ற முகவரிக்கு 31.12.2022ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

03. வழங்கல் / சேவைகள் 2023ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.

04. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களில் திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.

05. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021 225 6650 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்

(CR 38708)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துச் சீரின்மையால் இறாலுக்கு சந்தைவாய்ப்பில்லை

## நாகேந்திரபுரம்துறை மீனவர்கள் கவலை



கிளிநொச்சி, டிசெ. 10

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை - நாகேந்திரபுரம் துறைக்குச் செல்லும் வீதி போக்குவரத்துக்கு சீரின்றி காணப்படுவதால் கடலுணவுகளை சந்தைப்படுத்த முடியாதுள்ளது என கடற்றொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்;

கடற்றொழிலை பிரதானமாகக் கொண்ட 350க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. குறிப்பாக பருவகால இறால் தொழிலை பிரதானமாக கொண்டவர்கள் அதிக முள்ளனர்.

இந்தநேரத்தில் தாம் பிடிக்கின்ற இறாலை உரியமுறையில் சந்தைப்படுத்த போக்குவரத்து சீரின்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றோம்.

அத்துடன் இறாலை வாங்குவதற்கு வியாபாரிகளும் வரமுடியாத நிலை காணப்படுகிறது. இதனால் உழவி யந்திரங்களைப் பயன் படுத்தி இறால்களைக்கொண்டு சென்று வாகனங்களில் ஏற்றுவதால் வியாபாரிகளுக்கு இரட்டிப்பு செலவாகின்றது.

இதுதொடர்பில் பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியபோது வீதி புனரமைக்கப்படவில்லை. உற்பத்திகளைச் சந்தைப்படுத்த போக்குவரத்து மிகவும் அவசியமாகும். எனவே குறித்த வீதியை புனரமைப்பதற்கு கடற்றொழில் அமைச்சர் கவனம் செலுத்தி, வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச- 113)


## தென்மராட்சி பழ உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

சகல அங்கத்தவர்களுக்கும்

### விசேட பொதுச் சபைக் கூட்டம்

**காலம்** :- 31.12.2022 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி
**இடம்** :- சங்க மண்டபம்
**தலைமை** :- திரு.இ.அ.ஆனந்தராசா அவர்கள் - தலைவர்
**நோக்கம்** :- நிர்வாக சபைத் தெரிவு

சங்கத்தின் அங்கத்தவர்களில் சிலர் இடம்பெயர்ந்து பிறிதொரு இடங்களில் வசித்து வருவதால் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தவறாது இக் கூட்டத்திற்கு சமுகம் தந்து ஒத்துழைப்பு நல்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு :-**

**077 467 3010**

**தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

தலைவர்.
தென்மராட்சி பழ உற்பத்தியாளர்
விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கண்டி வீதி.
மீசாலை.

(CR 387109 1)



## 16ஆவது நினைவலைகள்



வையத்தின் மைந்தனாக
16.08.1963

தெய்வத்தின் சொந்தமாக
06.12.2006

### அமரர் நாகமுத்து ரவிச்சந்திரன்

முன்னை நாள் ஆசிரியர், யா/ மிருசுவில் அ.த.கபாடசாலை

திதி : கார்த்திகை மாத அபரத்துதியை

ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டு
பதினாறு ஆண்டுகள் கடந்தாலும் உங்கள்
நினைவுகள் நீங்காது எம்முள் இறையாகி
என்றென்றும் எமக்கு நல்லன தந்திடுவீர்

ஓம் சாந்தி!

நீங்காத நினைவுகளுடன்

**அன்பு மனைவி திலகவதி மற்றும் குடும்பத்தினர்**
**நாவற்காடு, வரணி.**

(CS 48032 ) (3/6)



## யாழ்ப்பாணம் மாநகர சபை

### இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், சந்தைகள், பல்பொருள் வாணிபக் கடைகள், சிற்றுண்டிச்சாலை, ஒலிபரப்புச் சேவைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2023 (01.01.2023 - 31.12.2023)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2023 ஆம் திகதி முதல் 31.12.2023 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,150.00** (வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 12.12.2022 – 22.12.2022
(மு.ப **9.00** - பி.ப. **3.00** மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 23.12.2022 மு.ப **10.00** மணி வரை
கேள்வி திறத்தல் - 23.12.2022 மு.ப **10.00** மணிக்கு

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **23.12.2022 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

| இல | இறைச்சிக்கடை, பல்பொருள் வாணிபம், சந்தை, சிற்றுண்டிச்சாலை | கடை இல | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த மீள்கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 864,169.02 |
| 2 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 1,026,608.00 |
| 3 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 161,652.10 |
| 4 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 436,620.86 |
| 5 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 366,324.75 |
| 6 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 634,671.03 |
| 7 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 711,722.81 |
| 8 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 167,200.00 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 273,790.00 |
| 10 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 457,762.25 |
| 11 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 66,050.97 |
| 12 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 661,432.75 |
| 13 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 681,457.04 |
| 14 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 553,528.14 |
| 15 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 548,729.50 |
| 16 | குருநகர் பன்றி இறைச்சிக்கடை | | 5,000.00 | 366,510.76 |
| 17 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 283,696.18 |
| 18 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 199,473.88 |
| 19 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 177,443.11 |
| 20 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 197,080.20 |
| 21 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.11 | 5,000.00 | 58,866.96 |
| 22 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.12 | 5,000.00 | 10,233.01 |
| 23 | **குருநகர் மீன் சந்தை (காலை 7.00 மணிக்கு பின்னர் திறக்கப்படல் வேண்டும்)** | | 10,000.00 | 5,748,022.50 |
| 24 | செங்குந்தா சந்தை | | 10,000.00 | 7,875,120.00 |
| 25 | பாசையூர் மீன்சந்தை | | 2,000.00 | 376,200.00 |
| 26 | புங்கன்குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் சந்தை | | 2,000.00 | 8,955.05 |
| 27 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ் வுகளின் போது நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | | 1,000.00 | 11,976.94 |
| **விளம்பர ஒலிபரப்பு சேவைகள் குத்தகைக்கு வழங்குதல் 2023.01.01 - 2025.12.31 (மூன்று வருடங்கள்)** | | | | |
| 28 | விளம்பர ஒலிபரப்பு சேவை (நவீன சந்தை கட்டிட தொகுதி மேல்மாடி) | | 30,000.00 | 1,567,500.00 |
| 29 | விளம்பர ஒலிபரப்பு சேவை (செங்குந்தா சந்தை தொகுதியின் மீன்சந்தைக்கு மேல்) | | 10,000.00 | 522,500.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 இற்கு தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
[illegible] குழு,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிள்ளையார் கதை**

வேண்டுகின்ற அடியரெங்கள் வேதனையைத் துடைத்தருளும்
வேழமுகா உன்பாதம் போற்றினோம் வேதவனத்தினிலே
வந்திருந்து இரக்கின்றோம் வருந்துயர்கள் துடைத்தெம்மை
சந்ததமும் காப்பாய் சரண்

-முருகு

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** அனுகூலமானநாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திடீர் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்குவாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். ஆதாயம் கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் குடும்பப் பெரியவர்களுடன் கலந்து பேசி முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காகப் பாடுபடவேண்டியிருக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான பிரச்சினை ஒன்றில் வாழ்க்கைத் துணை உங்களுடைய ஆலோசனையைக் கேட்டு வருவார்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். லாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** புதிய முயற்சியைத் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார்.


## வலி.மேற்கு பிரதேசசபையின் சுகாதாரக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் சுகாதாரக் குழுக்கூட்டம் சபையின் பிரதான மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டதோடு தீர்வு தொடர்பான பொறிமுறைகளும் கலந்துரையாடப்பட்டன.

சபையின் தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் சபையின் உறுப்பினர்கள், மானிப்பாய், இளவாலை, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகள், மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையினர், சங்கானை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-14,125)





## நடனமிட்டான் குளம் வெள்ளத்தால் நிரம்பியது

முல்லைத்தீவு, டிசெ. 10

வள்ளிபுனம் - நடனமிட்டான் குளம் நேற்றுமுன்தினம் பெய்த கன மழை காரணமாகவும் அதன் தொடர்ச்சியான வெள்ளத்தாலும் நிரம்பியுள்ளது.


மண்டோஸ் புயல் காரணமாக ஏற்பட்ட கடும் மழையால் அந்தக் குளமும் அதைச்சூழவுள்ள பகுதிகளிலும் வெள்ளம் சூழ்ந்துள்ளது. அருகிலுள்ள பிள்ளையார் கோவிலுக்குள்ளும் வெள்ளம் உட்புகுந்துள்ளது. வெள்ளம் காரணமாக அந்தப் பகுதி மக்கள் வெளியில் நடமாட முடியாமல் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## மண்டோஸ் தாண்டவம்: 800 பப்பாசிகள் அழிவு

வவுனியா, டிசெ. 10

மண்டோஸ் புயலின் தாக்கம் காரணமாக வவுனியாவில் சுமார் 800க்கும் மேற்பட்ட பப்பாசிகள் அழிவடைந்துள்ளன.

வவுனியா - ஓமந்தை பன்றிக்கெய்தகுளம், நெடுங்கேணி போன்ற பகுதிகளில் பயிரிடப்பட்டு அறுவடை நிலையில் காணப்பட்ட சுமார் 800க்கும் மேற்பட்ட பப்பாசி மரங்களே இவ்வாறு அழிந்துள்ளன. அத்துடன், குறித்த பகுதிகளில் பலநூறு வாழை மரங்களும் அழிவடைந்துள்ளன. (ம-110)



# கடை உடைத்துத் திருட்டு: 4 சந்தேகநபர்கள் கைது!

பல இலட்சம் பெறுமதியான பொருள்களும் மீட்பு!

மன்னார், டிசெ. 10

மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடை உடைத்துத் திருடிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று மடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணையிலுப்பைக்குளம் பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன. இது தொடர்பில்



வர்த்தக நிலையத்தின் உரிமையாளரால் மடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த மடு பொலிஸார், திருட்டுடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்தனர். அத்துடன் திருடப்பட்ட சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் சந்தேகநபர்களிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நான்கு சந்தேகநபர்களும் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவர் என்று மடு பொலிஸார் தெரிவித்தனர். (ம-14,213)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர்கள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் ந.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது அடுத்த ஆண்டு வரவு- செலவுத் திட்டம் தொடர்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-17)

# யாழ். பல்கலைக்கழகத்தில் ஊடகச் செய்தியறை திறப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 10

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியீட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறை' கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். நகரின் ஜும்மா பள்ளி வீதியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஊடகக் கலையகம் அமைந்திருக்கும் வளாகத்தில் நிறுவப்பட்ட இந்த ஊடகச் செய்தி அறையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு சுவிஸ்லாந்து நாட்டு ஹெல்வெற்றாஸ் நிறுவனத்துக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தச் செய்தியறை கையளிக்கப்பட்டது.

இந்தப் பல்செயற்பாட்டு களமானது பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் மாணவர்கள், துறைசார் நிபுணர்கள், ஊடகத் தொழில்வாண்மையாளர்கள், வளவாளர்கள் ஆகியோருக்கிடையே இணைந்து செயற்படல் மற்றும் கூட்டுழைப்பு என்பவற்றுக்கான இயலுமையை வழங்கக்கூடியதாக அமையப்பெற்றுள்ளது. (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (11.11.2022) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
**மாணிக்கம் இராசலிங்கம் (AMR)**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கீள் குடும்ப சமேதரராய் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 09.11.1931

**திருமதி திலகவதி மாணிக்கவாசகர்**

மறைவு 09.12.2022

(முன்னாள் ஆசிரியர் - கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி)



வைமன் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் கந்தையா உபாத்தியார் வீதி, கந்தரோடையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி மாணிக்கவாசகர் நேற்று (09.12.2022) வெள்ளிக்கிழமை தேகமுத்தி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் (Hindu Board) செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விஸ்வநாதன் மாரிமுத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (முன்னாள் ஆசிரியர்-கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், மயூரனின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் கந்தரோடை இல்லத்தில் இடம்பெற்று, பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் கந்தரோடை சங்கன்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தையா உபாத்தியார் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.
077 8177 491

(CS 22170) 1-6

தகவல் :
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (23.11.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
**சின்னத்துரை வாமதேவன்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


"இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்."

இல.309, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.
077 1140 472

(CS 22168) 1-6

# மரண அறிவித்தல்



மலர்வு 20.10.1936

உதிர்வு 09.12.2022

## கந்தையா துரைசிங்கம்

இணுவில்கிழக்கு, வங்கியடியை பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா துரைசிங்கம் நேற்று (09.12.2022) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இளையபிள்ளை தம்பதியரின் மூத்தமகனும், செல்லையா தம்பதியரின் மருமகனும், அமரர் பராசக்தியின் அன்புக் கணவரும், அமரர் நாகராசா, அமரர் தெய் வேந்திரம், சரோஜினிதேவி, பத்மினி (வேவி), கமலாதேவி (பவளம்), மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், துரைராஜசிங்கம் (கனகலிங்கம்), அமரர் சுப்பிரமணியம், சுந்தர லிங்கம் (ராசா), பாலசுப்பிரமணியம், கமலாயினி, யோகராணி ஆகியோரின் மைத்துனரும் செந்தில்ராஜன், பவிஜன், தெய்வகுமார், தெய்வதர்ஷினி, தெய்வதாரணி, செல்வக்குமரன், புருஷோத்தமன், கலையரசி, கலைவாணி, கல்யாணி ஆகியோரின் பெரியப்பாவும், தயாபரன் (தயா), குருபரன், (முருகதாஸ்), அமரர் கலைச்செல்வி (செல்வி), அருந்ததி (கௌரி), மதிவதனன் (மதி), மதிவதனி (சுமதி), அமுதவாணி, நல்லைக்குமரன், செல்வக்குமரன், பார்த்தீபன், காலஞ்சென்ற பரந்தாமன் மற்றும் எழில்ராஜி, வாமலோசன் (மயூரன்), பாலகிரீஷன், வைஷ்ணவன், வைஷ்ணவி, ஸ்ரீகோபி கிருஷ்ணா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வேம்போலை,
இணுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
077 6360 558

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*635 கிலோ*

## புழுப்பிடித்த ஒடியல்மா காரைநகரில் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 10

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் இயங்கும் பனை அபிவிருத்தி அதிகார சபையின் கிளைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த 635 கிலோ கிராம் புழுப்பிடித்த ஒடியல்மா நேற்றுமுன்தினம் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நெடுந்தீவிலிருந்து ஆயிரம் கிலோ ஒடியல்மா காரைநகருக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அங்கிருந்து 435 கிலோ விற்பனைக்காக அனுப்பப்பட்டுள்ள நிலையிலேயே எஞ்சிய 635 கிலோ மாவே பாவனைக்குதவாத நிலையில் மீட்கப்பட்டு சீல் செய்யப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை நீதிமன்றில் இதுகுறித்து வழக்குத் தொடரவுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ஒ-5-125)

### அழிவுகளை...

மண்டோஸ் புயல் இலங்கையின் 15 மாவட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 15 பேர் காயமடைந்துள்ளனர். 3 ஆயிரத்து 5 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 33 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்து 720 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

வடக்கு மாகாணத்தில் நேற்றுமுன்தினம் காலையிலிருந்து நேற்றுக் காலை வரையில் கடுமையான காற்றுடன் மழை பெய்தது. புயல் காரணமாக கடும் குளிரான காலநிலையும் நிலவியது. அத்துடன் பல இடங்களிலும் அடிக்கடி மின்சாரமும் தடைப்பட்டது. பிரதான வீதிகள், உப வீதிகள், குச்சொழுங்கைகள் என அனைத்து இடங்களிலும் மரங்கள் பாறி வீழ்ந்திருந்தன. சில இடங்களில் மரங்களின் கொப்புகள் முறிந்து வீழ்ந்திருந்தன. எனினும் தெய்வாதீனமாக மனித உயிர் இழப்புக்களோ, காயங்களோ வடக்கில் பதிவாகவில்லை.

இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில், 112 குடும்பங்களைச் சேர்ந்த 407 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு முழுமையாகவும், 76 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. சுமார் ஆயிரத்து 500 வாழை மரங்கள் வரையில் முறிந்து வீழ்ந்துள்ளன. பனைமரங்களும், தென்னை மரங்களும் முறிந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 141 குடும்பங்களைச் சேர்ந்த 454 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 141 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பலா, வாழை, சோளம், மரவள்ளி, தென்னை போன்றன பாதிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 154 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 11 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 10 கரைவலைகள் சேதமடைந்துள்ளன. 4 படகுகள் சேதமடைந்துள்ளன. 140 வாழை மரங்கள் வரையில் அழிவடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 182 குடும்பங்களைச் சேர்ந்த 611 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 42 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 7 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் சுமார் ஆயிரம் பப்பாசி மரங்கள் முறிவடைந்துள்ளன.

இதேவேளை- வடக்கு மாகாணத்தில் கால்நடைகள் பல உயிரிழந்துள்ளன. இது தொடர்பில் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.வசீகரன் 'உதயனுக்கு' தெரிவித்ததாவது:-

நேற்று பி.ப. 3 மணிவரையில் அண்ணளவாக கிளிநொச்சி மாவட்டத்தில் 167 மாடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 150 வரையிலான மாடுகளும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை அதே எண்ணிக்கையிலான மாடுகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கிழக்கிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவிலும் சுமார் 100 வரையிலான ஆடுகள் உயிரிழந்துள்ளது. இவை தொடர்பான தெளிவான புள்ளிவிவரம் இன்று அல்லது நாளையே எமக்குக் கிடைக்கும்.

வயல்களில் நெற் செய்கை மேற்கொள்ளப்படுவதால் மாடுகள் திறந்த வெளியிலேயே பட்டியில் அடைக்கப்பட்டிருந்தன. இதனால் கடும் காற்றுடனான குளிரான காலநிலையால் அவை உயிரிழந்துள்ளன - என்று அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-5-125)

### 'மண்டோஸ்'...

தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 5ஆம் திகதி வங்கக்கடலில் உருவான காற்றமுத்த தாழ்வு நிலை கடந்த 7ஆம் திகதி புதன்கிழமை தீவிர காற்றமுத்த தாழ்வு மண்டலமாக நிலைகொண்டிருந்தது. அது நகர்ந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை புயலாக உருப்பெற்றது. புயலுக்கு 'மண்டோஸ்' எனப் பெயர் சூட்டப்பட்டது. அது தொடர்ந்து வலுப்பெற்று நகர்ந்தது.

இலங்கைக்கு குறிப்பாக வடக்கு மாகாணம் புயலின் நகர்வுப் பாதையின் வளையத்தினுள் நேற்று அதிகாலை வரையில் இருந்தது. நேற்றுக்காலையின் பின்னர் புயல் வலுவிழக்கத் தொடங்கியது. அத்துடன் புயலின் ஆபத்தான வளையத்திலிருந்து வடக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று நள்ளிரவு 11 மணியளவில் தமிழகத்தின் மாமல்லபுரம் ஊடாக புயல் கரையைக் கடக்கும் என்றும் அதன் நகர்வு மணிக்கு 12 கிலோமீற்றர் என்ற அளவில் மெதுவாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**(இந்தச் செய்தி அச்சுக்குப்போகும் வரை புயல் கரையைக் கடக்கவில்லை)**

(அ-ஒ-5)

### அரசால்...

களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அவை வீரியம் குறைந்தவை என்று விவசாயிகள் குற்றம் சுமத்தியிருந்தனர். இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உரம் வீரியமானது என்று ஆராய்ச்சியாளர்களின் முதற்கட்ட ஆராய்ச்சியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உரத்தின் துணிக்கை பெரிது, சிறிதாக இருக்கின்றது. அதனால் அதை வீரியம் குறைந்த உரம் என்று விவசாயிகள் கருதுகின்றனர். ஆனால், உரத்தில் எந்தவொரு பிரச்சினையும் இல்லை. பொட்டாசியம் குறைபாட்டால் நெற்பயிரின் நுனி மஞ்சள் நிறமாகி கருகுகின்றது. இதற்கு கமநல சேவை நிலையங்கள் ஊடாக எம்.ஓ.பி. வழங்கப்படுகின்றது. விவசாயிகள் அதனைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை. அதனைப் பெற்று விசிறுவதன் ஊடாக இதன் தாக்கத்தை ஈடு செய்யலாம்'- என்றார் அவர்.

(அ-ஒ-5-125)

### ஒரு லட்சம்...

அதிகளவான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதுடன் காலநிலையும் ஒத்துழைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 ஆயிரத்து 416 விவசாயிகளால், 12 ஆயிரத்து 55 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவர்களுக்கு 965.45 கிலோகிராம் யூரியாஉரம் இதுவரைவிநியோகிக்கப்பட்டுள்ளதாக, யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் தெய்வநாயகி தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 28 ஆயிரத்து 874 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் 19 ஆயிரத்து 772 விவசாயிகளால் நெற்பயிர்ச் செய்கை இம்முறைமுன்னெடுக்கப்படுவதாக கிளிநொச்சி மாவட்டத்தின் உதவி ஆணையாளர் தேவரதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வருடம் 500 ஏக்கர் தரிசு நிலப்பரப்பு நெற்பயிர்ச் செய்கை நிலங்களாக மாற்றப்பட்டு இம்முறை 20 ஆயிரத்து 75 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் 19 ஆயிரத்து 600 விவசாயிகளால் நெற்பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பரணிதரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 900 ஹெக்ரேயர் நிலப்பரப்பு கடந்த மற்றும் இவ்வருடங்களில் தரிசு நிலங்களில் இருந்து நெற்பயிர்ச் செய்கை நிலங்களாக மாற்றப்பட்டு 23 ஆயிரத்து 339 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் 17 ஆயிரத்து 545 விவசாயிகளால் நெற்பயிர்ச் செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட உதவி கமநல சேவைகள் ஆணையாளர் விஷ்ணுதாசன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் 23 ஆயிரத்து 163 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் 17 ஆயிரத்து 545 விவசாயிகளால் நெற்பயிர் செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, இதுவரை 8 ஆயிரம் விவசாயிகள் உரத்தைப் பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் மரின் குமார் தெரிவித்தார். (அ-ஒ-5-125)

### தளபதிகள்...

கந்தையா வேலாயுதபிள்ளை தனது 85 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.

கார்த்திகை விளக்கீட்டை முன்னிட்டு ஆலயத்துக்குச் சென்று வந்தபோது, நேற்றுமுன்தினம் இரவு திடீரென வீதியில் விழுந்து அவர் உயிரிழந்தாரெனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், நேற்றுக் காலையிலேயே அவரது சடலத்தை பிரதேசத்திலுள்ளவர்கள் கண்டுள்ளனர்.

இவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் மாமனார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### போதைப்பொருளைச்...

வடக்கில் இராணுவ பிரசன்னத்தை அதிகரிப்பதே அரசின் மறைமுக நோக்கமாகக் காணப்படுகின்றது - இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் போதைப்பொருள் கட்டுப்படுத்தல் தொடர்பான கருத்தரங்கில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப்பொருள் பாவனையை ஒரு சாட்டாக வைத்து இராணுவமயமாக்கல் அதிகரிப்பதை வடக்கில் அவதானிக்கிறோம். அதுவும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குக் கூட இராணுவம் தலையிடுகிறது. போதைப்பொருள் பாவனையை மனித உரிமையின் அடிப்படையில் சுகாதாரப் பிரச்சினையாகத்தான் அதனைப் பார்க்கவேண்டும். சுகாதார அமைச்சு மற்றும் மருத்துவ நிபுணர்கள் தான் பரிகாரங்களைத் தேடவேண்டும். சில வாரங்களுக்கு முன் நீதியமைச்சர் வடக்கு வந்திருந்தார். அதன் பின்னர் போதைப்பொருள் ஒழிப்புக்காக நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறி அதற்கு இரண்டு நாள்களுக்குப் பின் இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகள் வடக்கில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வடக்கில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், அவர்கள் போராட்டம் நடத்துகின்றபோது அல்லது அவர்கள் போராட்டம் நடத்த தயாராகின்றபோது இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர் அவர்களின் வீடுகளுக்குச் சென்று அலுவலகங்களுக்குச் சென்று தொலைபேசியில் தொந்தரவு கொடுத்து, நீங்கள் இப்படி ஒரு போராட்டத்தை ஒழுங்கு செய்கின்றீர்கள், யார் வருகிறார்கள்? ஏன் செய்கிறீர்கள்? எனக் கேட்கின்றார்கள்.

அந்தளவுக்கு இராணுவத்துக்கு தரவுகள் கிடைக்கின்றன. ஆனால், இந்தப் போதைப்பொருளைப் பொறுத்தவரை மட்டும் வடக்குக்கு எவ்வாறு போதைப்பொருள் வருகின்றது என்பது தொடர்பாக அவர்களுக்குத் தெரியாதா?

இராணுவத்தின் பிரசன்னத்தை அதிகரித்து சோதனைச்சாவடி அமைப்பதால் மாத்திரம் இதனைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனென்றால் அரச பொறிமுறையில் இயங்குகின்ற இராணுவத்தினரும், பொலிஸாரும்கூட போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள், உடந்தையாக இருக்கிறார்கள். அவர்களின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது இது தென்படுகிறது.

இந்த விடயத்தில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவதால் இன்னமும் மோசமான நிலைமைதான் வருமே தவிர பிரச்சினை தீராது - என்றார்.

(அ-ஒ-125)

### சதொசவில்...

பட்ட மீன் (425 கிராம்) விலை 495 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையைச் சீரழிக்க இலவச போதைப்பொருள்

## வெளிநாட்டு சூழ்ச்சி என்று நீதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 10

வெளிநாட்டிலிருந்து நாட்டுக்கு இலவசமாக போதைப்பொருள் விநியோகிக்கப்படுகின்றது எனப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன. இலங்கையை முழுமையாகச் சீரழிக்கும் வெளிநாட்டுச் சூழ்ச்சியின் ஒருபகுதியாகவே இது இடம் பெறுகின்றது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனை கடந்த காலங்களைக் காட்டிலும் தற்போது தீவிரமடைந்துள்ளது. உயர் பாடசாலைகள் முதல் கீழ்நிலை பாடசாலைகள் வரை ஐஸ் எனும் போதைப் பொருள் புகுந்துள்ளது. இது மகளிர் பாடசாலைகளையும் விட்டுவைக்க வில்லை. இதனைத் தடைசெய்வதற்கான சட்டவரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 5 லட்சம் வரையிலான இளைஞர், யுவதிகள் போதைப் பொருளுக்கு அடிமையானவர் களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது தொடர்பில் கடுமையான சட்டங்களை இறுக்கா விட்டால் இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரிப்பதைத் தவிர்க்கமுடியாது.

நாட்டை முழுமையாக சீரழிப்பதற்கு வெளிநாட்டுச் சூழ்ச்சிகள் நடக்கின்றன என சந்தேகிக்கப்படுகின்றது. வெளிநாட்டில் இருந்து எமது நாட்டுக்கு இலவசமாகப் போதைப்பொருள் விநியோகிக்கப்படுகின்றது எனப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன. எமது நாடு எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினையைவிடவும் போதைப்பொருளால் ஏற்படக் கூடிய பிரச்சினை பாரதூரமாகியுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

போதைப்பொருள் வியாபார வலைப் பின்னல் கண்டறியப்பட்டு அடியோடு துடைத்தெறிய சட்டங்கள் இனி கடுமையாக்கப்படும் - என்றார். (ச-இ)

## 'கோ ஹோம் சீனா' கோஷம்

# சாணக்கியனுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்!




சீனாவுடனான கடன் மறுசீரமைப்புப் பேச்சை சர்வதேச நாணய நிதியம் மேற்கொண்டு வரும் நிலையில் 'கோ ஹோம் சீனா' என்று சீனாவுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு எதிராக கொழும்பில் நேற்றுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நவ ஜனதா பெரமுன குழுவினரே சீனாவுக்கு ஆதரவு தெரிவித்தும், சாணக்கியனுக்கு எதிராகவும் கொழும்பிலுள்ள சீன தூதரகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த சீனா எந்த அபிவிருத்தி முதலீடுகளையும் மேற்கொள்ளவில்லை. சீனாவின் முதலீடுகளால் இலங்கைக்கு எந்தவித நலனும் கிடைக்கப்பெறவில்லை. சீனா - இலங்கையின் உண்மையான நட்பு நாடு இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இறைபணி பொன்விழா

யாழ்ப்பாணம், டிசெ. 10

ஊரணி சென். அன்ரனிஸ் தேவாலயத்தின் பங்குத்தந்தை அருட்தந்தை ரி.தேவராஜனின் இறைபணி பொன்விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் யோகலிங்கம் சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், கௌரவ அதிதிகளாக யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட்திரு பி.ஜே.ஜெபரட்ணம், சுண்டுக்குளி புனித யுகானியார் ஆலய பங்குத்தந்தை அருட்திரு ஜே.ஏ.ஜேசுதாஸ், திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை முன்னைநாள் அதிபர் அருட்சகோதரி ஜோலண்ட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-14)


சனி ஸ்பெஷல்
2:1 இலவசம்
கோழிப்புக்கை, நாசி, அப்பம்
YouTube Yarlpardy, விடுதி, உணவகம்.
51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 0777 340 026

வெளிநாட்டு மணமகளுக்கு உள்நாட்டு மணமகன் தேவை
1990 ஆம் ஆண்டு பிறந்த Canada இல் உள்ள ரிஷபராசி ரோகினி நட்சத்திர முடைய மணமகளுக்கு மணமகன் தேவை. (CS 22144)(3/6)
தொடர்பு : 074 353 6881

வேலையாட்கள் தேவை
யாழ்.-கொழும்பு A/C பஸ்சேவை பொதிகள் சேவையில் ஈடுபடும் நிறுவனத்தின் பருத்தித்துறையில் இயங்கும் அலுவலகத்திற்கு ஆண் வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 3866 250

காணி விற்பனைக்கு
கொக்குவில் சந்திக்கு அண்மையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். (K.K.S. வீதியிலிருந்து 15M உள்ளே)
தொடர்பு: 077 68 48 810

வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் இயங்கும் ES Printers அச்சகத்திற்கு
☆ வரவேற்பாளர் தேவை
ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையுடன் இன்று (10.12.2022) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்,

359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி பகுதியில் 120 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.
- **A32** பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- **A32** பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

தரகர் தேவையில்லை
பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.
தொடர்பு:- ஜெயம்
077 8147 389
077 9865 457


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.